**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன்,** B.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

*******

2023–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 – ம் நாள் வியாழக்கிழமை

******

**வழக்கிடைமனு எண்.6/2022–ல் வழக்கிடைமனு எண்.2/2021–ல் நிறைவேற்று மனு எண்.3/2021–ல் அசல் வழக்கு எண். 154/2014**

சரிதா .....மனுதாரர்/ஆட்சேபனைதாரர்/ 3–ம் தரப்பினர்

...எதிர்...

1. கண்ணன் ... 1–ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்/ வாதி

2. கணேசமூர்த்தி
3. மீனாட்சி
4. செல்வி
5. மணோம்மணி
6. சூரியகலா
7. சார் பதிவாளர், சீர்காழி
8. தமிழ்நாடு அரசு சார்பாக அதன் மாவட்ட ஆட்சியர் ..2,3,4,5,6,7,8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 29.08.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு S.முத்துக்குமார் அவர்களும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு S. சுந்தரய்யா அவர்களும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. விஜய் அவர்களும், 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு A.சத்தியமூர்த்தி அவர்களும், 7 மற்றும் 6 எதிர்மனுதார்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு S.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு

வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்/ஆட்சேபனைதாரர்/3−ம் தரப்பினர் தரப்பில் அசல் ஆட்சேபணை மனுவினை திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை-6, விதி-17-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் இம்மனுவில் மனுதாரர், அசல் வழக்கில் 3−ம் தரப்பினர். இம்மனுவினை அசல் நிறைவேற்று மனுவினை மனுதாரரின்வசம் உள்ள வழக்கு சொத்தினை பொறுத்து நிறைவேற்றம் செய்யக்கூடாது என்று மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர் தரப்பில் முதன்மை விசாரணைத் துவங்கப்பட்டு மனுதாரரை எதிர்மனுதாரர்கள் குறுக்கு விசாரணை செய்ய கெடு போடப்பட்டு உள்ளது. இந்நிலையில் ஆட்சேபனை மனுவில் உள்ள சங்திகள் தற்போது தான் மனுதாரருக்கு தெரியவருகிறது. அது குறித்து மனுதாரரின் வழக்கறிஞரிடம் ஆலோசனை கேட்க்கும்போதுதான் அசல் ஆட்சேபனை மனுவினை திருத்தம் செய்து ஆட்சேபணை மனுவினை மேல் நடத்த வேண்டும் என்று மனுதாரருக்கு கிடைத்த ஆலோசணையின் பேரில் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரர்/ஆட்சேபனைதாரர்/3−ம் தரப்பினர் தரப்பில் அசல் ஆட்சேபணை மனுவினை திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரின் மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

மனுதாரரின் மனு சரியல்ல. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்றகதக்கதல்ல எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. மனுவுக்கு ஆதரவாக மனுவில் கூறியுள்ள சங்கதிகள் சரியல்ல

வன்மையாக மறுக்கப்படுகிறது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள பாத்ய மனு E.A.No.1/2021-ஐ எக்காரணம் கொண்டும் திருத்தம் செய்ய முடியாது. E.A.No.2/2021 என்பது மனுதாரர் தாக்கல் செய்த ஸ்டே மனு அந்த மனு not press என்று முடிக்கப்பட்டுள்ளது. எனவே முடிக்கப்பட்டுள்ள மனுவினை மனுதாரர் திருத்தம் செய்ய கோரி உள்ளார். E.A.No.1/2021-ல் மனுதாரரை முதன்மை விசாரணை செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய முன்வந்த நிலையில் இந்த திருத்த மனுவினை தாக்கல் செய்து திருத்த முடியாது அது Bonafide ஆனதல்ல. 1-ம் எதிர்மனுதாரர் வழக்கு சொத்துக்களில் அவருக்கு 1/6 பாகம் பிரித்து கிடைக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்து அதன் படி முதல்நிலை தீர்ப்பாணை தீர்ப்பாகி அதன் அடிப்படையில் ஆணையர்மூலம் இறுதி நிலை தீர்ப்பாணைக்கு மனு தாக்கல் செய்து அதில் மக்கள் நீதிமன்றத்தில் ஒரு சமரச உடன்படிக்கை ஏற்பட்டு மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்குள் பாகம் பிரிப்பட்டுள்ளது. 2 முதல் 5 எதிமனுதாரர்கள் நிதிமன்ற கட்டணம் செலுத்தினாலும், செலுத்தாவிட்டாலும் அவர்களின் பாக வீதத்தை யாரும் மறுக்க முடியாது. 1-ம் எதிர்மனுதாரருக்குரிய 1/6 பாக வீதத்தை வசம் எடுக்க வேண்டி நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார். மக்கள் நீதிமன்ற மூலம் தீர்வு காணப்படும் வழக்குகள் மற்றும் மனுக்களில் நீதிமன்றக் கட்டணம் செலுத்துவதில் இருந்த விலக்களிக்கப்பட்டுள்ளது. மக்கள் நீதிமன்றத்தில் தரப்பினர்கள் மத்தியில் தீர்வு ஏற்பட்டதை பொறுத்து வழக்கில் தரப்பினராக இயல்லாதவர் யாரும் சி.பி.சி.47 பிரிவின்படி மனு தாக்கல் செய்ய முடியாது. அப்படிஇருக்கையில் அதன் படி போடப்பட்ட மனுவை திருத்தம் செய்ய கோருவதற்கு எவ்வித அடிப்படை முகாந்திரமும் இல்லை. மனுதாரர் என்ன காரணத்தினால் மனுவில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற விபரமும், திருத்தம் செய்வதற்காக அவசியம் என்ன, அதற்கான நியாயம் என்ன, காரணம் என்ன அவ்வாறு செய்யப்படாவிடடால் மனுதாரருக்கு எவ்வகையில் இழப்பு ஏற்படும் என்ற எந்த அடிப்படை சங்கதிகளும் மனுவில் கூறப்படவில்லை என்பதால் இந்த மனு நிராகரிக்க தக்கதாக உள்ளது. மேலும் இந்த மனுவை

தாக்கல் செய்ய மனுதாரருக்கு எந்த Locus Standi -யும் கிடையாது. திருத்தம் செய்ய வேண்டிய சங்கதிகளை ஆட்சேபணைதாரருக்கு அந்த உரிமை தரப்பினர்கள் கூற முடியாது. திருத்தம் செய்ய வேண்டிய சங்கதியே தவறாக உள்ளது. பாத்திய மனுவில் கூறிய விபரங்களை மனு விசாரணை ஆரம்பித்த பிறகு இடை, இடையே தான் விருப்பத்திற்கு ஏற்ப மனுவினை திருத்தம் செய்ய முடியாது. மனுதாரர் மனுவில் எவ்வித உண்மை தன்மையும் இல்லை. மனுதாரர் எவ்வித அடிப்படை காரணமம் இல்லால் மனு விசாரணையை காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனைக்கு</u>

3. மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

<u>தீர்வு:</u>

5. மனுதாரர் இம்மனுவில் மனுதாரர், அசல் வழக்கில் 3-ம் தரப்பினர் என்றும், இம்மனுவினை அசல் நிறைவேற்று மனுவினை மனுதாரரின்வசம் உள்ள வழக்கு சொத்தினை பொறுத்து நிறைவேற்றம் செய்யக்கூடாது என்று மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மனுதாரர் தரப்பில் முதன்மை விசாரணைத் துவங்கப்பட்டு மனுதாரரை எதிர்மனுதாரர்கள் குறுக்கு விசாரணை செய்ய கெடு போடப்பட்டு உள்ளது என்றும், இந்நிலையில் ஆட்சேபனை மனுவில் உள்ள சங்திகள் தற்போது தான் மனுதாரருக்கு தெரியவருகிறது என்றும், அது குறித்து மனுதாரரின் வழக்கறிஞரிடம் ஆலோசனை கேட்க்கும்போதுதான் அசல் ஆட்சேபனை மனுவினை திருத்தம் செய்து ஆட்சேபணை மனுவினை மேல் நடத்த வேண்டும் என்று மனுதாரருக்கு கிடைத்த ஆலோசணையின் பேரில் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரர்/ஆட்சேபனைதாரர்/3-ம் தரப்பினர்

தரப்பில் அசல் ஆட்சேபணை மனுவினை திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரின் மனுவினை அனுமதிக்க வேண்டும். என்றும் வாதம் செய்யப்பட்டது.

**6.** எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள பாத்ய மனு E.A.No.1/2021-ஐ எக்காரணம் கொண்டும் திருத்தம் செய்ய முடியாது என்றும், E.A.No.2/2021 என்பது மனுதாரர் தாக்கல் செய்த ஸ்டே மனு அந்த மனு not press என்று முடிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே முடிக்கப்பட்டுள்ள மனுவினை மனுதாரர் திருத்தம் செய்ய கோரி உள்ளார் என்றும், E.A.No.1/2021-ல் மனுதாரரை முதன்மை விசாரணை செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய முன்வந்த நிலையில் இந்த திருத்த மனுவினை தாக்கல் செய்து திருத்த முடியாது அது Bonafide ஆனதல்ல என்றும், 1-ம் எதிர்மனுதாரர் வழக்கு சொத்துக்களில் அவருக்கு 1/6 பாகம் பிரித்து கிடைக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்து அதன் படி முதல்நிலை தீர்ப்பாணை தீர்ப்பாகி அதன் அடிப்படையில் ஆணையர்மூலம் இறுதி நிலை தீர்ப்பாணைக்கு மனு தாக்கல் செய்து அதில் மக்கள் நீதிமன்றத்தில் ஒரு சமரச உடன்படிக்கை ஏற்பட்டு மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்குள் பாகம் பிரிப்பட்டுள்ளது என்றும், 2 முதல் 5 எதிமனுதாரர்கள் நீதிமன்ற கட்டணம் செலுத்தினாலும், செலுத்தாவிட்டாலும் அவர்களின் பாக வீதத்தை யாரும் மறுக்க முடியாது என்றும், 1-ம் எதிர்மனுதாரருக்குரிய 1/6 பாக வீதத்தை வசம் எடுக்க வேண்டி நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மக்கள் நீதிமன்ற மூலம் தீர்வு காணப்படும் வழக்குகள் மற்றும் மனுக்களில் நீதிமன்றக் கட்டணம் செலுத்துவதில் இருந்த விலக்களிக்கப்பட்டுள்ளது என்றும், மக்கள் நீதிமன்றத்தில் தரப்பினர்கள் மத்தியில் தீர்வு ஏற்பட்டதை பொறுத்து வழக்கில் தரப்பினராக இயல்லாதவர் யாரும் சி.பி.சி.47 பிரிவின்படி மனு தாக்கல் செய்ய முடியாது என்றும், அப்படிஇருக்கையில் அதன் படி போடப்பட்ட மனுவை திருத்தம் செய்ய கோருவதற்கு எவ்வித அடிப்படை முகாந்திரமும் இல்லை என்றும், மனுதாரர் என்ன காரணத்தினால் மனுவில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற விபரமும், திருத்தம் செய்வதற்காக அவசியம் என்ன, அதற்கான

நியாயம் என்ன, காரணம் என்ன அவ்வாறு செய்யப்படாவிட்டால் மனுதாரருக்கு எவ்வகையில் இழப்பு ஏற்படும் என்ற எந்த அடிப்படை சங்கதிகளும் மனுவில் கூறப்படவில்லை என்பதால் இந்த மனு நிராகரிக்க தக்கதாக உள்ளது என்றும், மேலும் இந்த மனுவை தாக்கல் செய்ய மனுதாரருக்கு எந்த Locus Standi -யும் கிடையாது என்றும், திருத்தம் செய்ய வேண்டிய சங்கதிகளை ஆட்சேபணைதாரருக்கு அந்த உரிமை தரப்பினர்கள் கூற முடியாது என்றும், திருத்தம் செய்ய வேண்டிய சங்கதியே தவறாக உள்ளது என்றும், பாத்திய மனுவில் கூறிய விபரங்களை மனு விசாரணை ஆரம்பித்த பிறகு இடை, இடையே தான் விருப்பத்திற்கு ஏற்ப மனுவினை திருத்தம் செய்ய முடியாது என்றும், மனுதாரர் மனுவில் எவ்வித உண்மை தன்மையும் இல்லை என்றும், மனுதாரர் எவ்வித அடிப்படை காரணமம் இல்லாமல் மனு விசாரணையை காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்தததில் வழக்கு சொத்தினை பொறுத்து நிறைவேற்றம் செய்யகூடாது என்று மனுதாரர்/ஆட்சேபணை தரப்பில் மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்துள்ள நிலையில், எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரரின் வழக்கறிஞரின் ஆலோசணையின்பேரில் அசல் ஆட்சேபணை மனுவினை திருத்தம் செய்ய மனுதாக்கல் செய்துள்ளார்.பிரதிவாதிகள் தரப்பில் மறுத்துள்ள நிலையில் இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ள திருத்தத்தை அனுமதிப்பதால் வழக்கின் வழக்கு மூலமோ, வழக்கின் தன்மையோ மாறிவிடப்போவதில்லை என்பதாலும், மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் பின்னிட்டு

ஏற்படும் (Multiplicity proceedings) ஒரே பொருண்மையின் அடிப்படையில் ஏற்படும் வழக்கு நடிவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டு தரப்பனர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி வழக்குரையை திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும் மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சணைக்கு தீர்வு காண்கிறது.

இறுதியில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.6/2022/–ல்
இடைமனு எண்.2/2021–ல்
நிறைவேற்று மனு எண்3/2021–ல்
அசல் வழக்கு எண்.154/2014
நாள்.07.09.2023.